# பெந்தோட்டை பிரதேச சபை

## காலி மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 27 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 02 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 22 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

--------------------------------------------

இவ்வறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பெந்தோட்டை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் காசுப் பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

-----------------------------------------------------------------------------------------------

2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளூராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

-------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) மீளாய்வாண்டிற்கான 17 நிர்மான வேலைகளுக்காக செலுத்த வேண்டிய கடன் கொடுத்தோர் ரூபா 7,124,195 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 7,848,172 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான செலவுகள் மற்றும் கடன் கொடுத்தோர் ரூபா 723,977 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான 03 நிர்மான வேலைகள் தொடர்பாக செலுத்த வேண்டிய கடன் கொடுத்தோர் மீதி ரூபா 1,455,411 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை

ரூபா 1,302,817 என காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான செலவுகள் மற்றும் கடன் கொடுத்தோர் மீதி ரூபா 152,594 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 55,940 இற்கான நிலையான சொத்துக்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) புதுப்பித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்த கப் வண்டியின் பெறுமதியை மூலதனப்படுத்தும் போது நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கின் மீதி ரூபா 1,500,000 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(உ) மிளாய்வாண்டிற்கான நிரந்தர பதவியணி சம்பளம் மற்றும் படிகள் செலவு ரூபா 14,591,697 தொகை எனினும் உள்ளூராட்சி ஆணையாளரினால் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 13,038,600 ஆகும். இதன் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய சம்பளம் மற்றும் படிகள் ரூபா 1,553,097 எனினும் அவை நிதிக் கூற்றுக்களில் ரூபா 1,200,000 என காட்டப்பட்டிருந்தமையால் கிடைக்க வேண்டிய வருமானம் ரூபா 353,097 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வு பெற்றுள்ள உள்ளூராட்சி ஊழியர்களுக்காக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை ரூபா 4,248,455 தொகைக்காக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் போது நன்கொடை காணி உறுதி ஒன்றின் மூலம் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த ரூபா 300,000 பெறுமதியான போகஹகொட காணியை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

---------------------------------------------------------------------------

12 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப்பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 4,324,185 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

1.3.4 கணக்காய்விற்கு சான்றுகள் இன்மை

------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 113,014,720 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக காணி உறுதிகள், நாளதுவரை பேணப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் பதிவேடு, கணிப்பீட்டு சபை அறிக்கைகள், மற்றும் மீதியை உறுதி செய்யும் சான்றிதழ்கள் போன்ற சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2 நிதி மீளாய்வு

--------------------------

2.1 நிதி விளைவுகள்

-----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது பிரதேச சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம்

ரூபா 5,459,925 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,242,459 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

-----------------------------

2.2.1 வீதவரி மற்றும் ஏக்கர் வரி

---------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 3,416,781 இற்கான வீதவரி ரூபா 116,781 இற்கான ஏக்கர் வரி என்பன 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158 இன் பிரகாரம் அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை

2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்து 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,383,833 இற்கான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 19,711,835 இற்கான முத்திரை கட்டணமும் கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.3 கடை வாடகை

----------------------

2013 ஆண்டின் போது வாடகைக்கு கொடுத்திருந்த பெந்தோட்டை எல்பிடிய பாதையில் 01 ஆம் இலக்க கடை வாடகையாளரிடம் 2014 மார்ச் வரை ரூபா 53,912 தொகையொன்று அறவிடப்படவேண்டியிருந்தது.

2.2.4 தொலைபேசி, தொலை தொடர்பு டவர் வரி

--------------------------------------------------------------------

2009 ஏப்ரல் 17 திகதிய இலக்கம் 1597/8 நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றுநிருப ஏற்பாடுகளின் பிரகாரம் அனைத்து டவர்களுக்கும் இசைவு சான்றிதழ் பெற்று கொள்ளவேண்டும், அத்துடன், அவ்வாறு பெற்றிருக்காவிடின் இசைவு சான்றிதழ் இன்றி பயன்படுத்தியதற்காக அங்கீகரிக்கப்பட்டு ஒரு வருடம் கடந்துள்ள திகதியில் இருந்து சபையினால் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை எனின் ஒரு நாளைக்கு ரூபா 50 வீதம் தண்டப்பணம் அறவிடப்படவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. 2014 மே 24 திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது சபையின் அதிகார பிரதேசத்தில் நிர்மானிக்கப்பட்டு பயன்படுத்தப்படும் டவர்களுக்காக ரூபா 21,000 இற்கான இசைவுக் கட்டணம் மற்றும் தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை என 2014 மே மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

2.3 மிகை விதிப்புக்கள்

-----------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் 1983 ஆண்டின் போது விதிக்கப்பட்ட மிகை விதிப்பு ஒன்று தொடர்பாக 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 6,238 தொகையொன்று அறவிடவேண்டியிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

----------------------------------------------

1988 இன் 74 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டிருந்த 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் சபையின் அனைத்து அங்கத்தவர்களும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் கூற்று சமர்பிக்க வேண்டும் எனினும் தலைவர், உபதலைவர் மற்றும் அனைத்து அங்கத்தவர்களும் 2013 ஆண்டிற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று வழங்கியிருக்கவில்லை.

3.2 செயற்பாட்டு திறமையின்மை

------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

3.2.1 போகஹகொட எஸ்டேட் காணி ஏல விற்பனை

---------------------------------------------------------------------

04 ஏக்கர்கள் 10 பர்சஸ்கள் கொண்ட பெந்தோட்டை வலல்லாவிட போகஹகொட எஸ்டேட் என்ற காணியை துண்டுகளாக பிரிப்பதற்காக தனியார் கம்பனி ஒன்றிற்கு 2013 பெப்ரவரி 13 திகதி துண்டுகளின் வரைபு அங்கீகரிக்கப்பட்டு அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2014 மார்ச் 26 திகதி மேற்கொள்ளப்பட்ட இடப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- ஏல விற்பனவு காணியில் இருந்து சபைக்கு வழங்கியிருந்த 54.88 பர்சஸ் கொண்ட துண்டு காணியின் தென்மேற்கு மூலையில் வயலை சேர்ந்த பகுதிக்கு எல்லையாக பயன்படுத்த முடியாத இடமொன்றில் அமைந்திருந்தது.

- காணியின் உள்ளே அமைந்துள்ள பாதைகளுக்கு தார் போடப்பட்டிருக்கவில்லை அத்துடன் வடிகால்களில் இரு பக்கங்களும் கொங்கிரீட் போடப்பட்டிருக்கவில்லை.

- மின்சாரம் மற்றும் நீர் வசதிகள் வழங்கியிருக்கவில்லை.

- காணியின் மேல் மூலையில் அமைந்துள்ள வாய்க்காலுக்கான ஒதுக்கிடம் ஒன்று வைக்காமல் காணி துண்டுகளை விற்பனை செய்திருந்ததுடன் அவ்வாறு விற்பனை செய்திருந்த காணி ஒன்றில் வாய்க்காலுக்குரிய எல்லையில் வீடு ஒன்று நிர்மானிக்கப்பட்டிருந்தது.

3.2.2 பதவியணிக் கடன்

----------------------------

சபையில் கடமையாற்றிய, இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள, கடமையை விட்டுச் சென்றுள்ள, இறந்த மற்றும் ஓய்வு பெற்றுள்ள 20 ஊழியர்களிடம் அறவீடுகள் நிலுவையாக இருந்த கடன் மீதிகள் ரூபா 67,676 ஆகும். அவற்றில் 16 நபர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 41,398

கடன் மீதி 2001 ஆண்டிற்கு முன்னர் இருந்து நிலுவையாக இருந்ததுடன் இக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்காக சபையினால் முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.3 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------

யாலேகம பெலன்கஸ்வத்த பாதை மற்றும் ஆரச்சிமுல்ல கோம்மல பாதையின் பகுதி ஒன்று மறுசீரமைப்பு நிர்மான வேலைகள் இரண்டிற்கான பொருட்கள் கொள்வனவின் போது மாவட்ட விலை குழுவின் அறிக்கைகளில் காட்டப்பட்டிருந்த விலைகளை விட மிகையாக கொடுப்பனவு மேற்கொண்டமையால் மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திலிருந்து ரூபா 63,266 தொகை ஒன்று மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

3.4 செயற்படாத சொத்துக்கள்

--------------------------------------

2013 ஜுன் 05 திகதி வெளியிட்டிருந்த இலக்கம் PC/MD/PR/2013 கொண்ட ஜனாதிபதி செயலாளரினால் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அரசாங்க நிறுவனங்களில் பயன்படுத்தப்படாத அழிவு நிலையில் காணப்படும் பழைய வாகனங்கள் மற்றும் பொறித் தொகுதிகளை 2013 செப்டம்பர் 05 திகதி அளவில் அவற்றுவதற்காக வேலைத் திட்டம் ஒன்றினை தயாரிக்கும் படி அறிவிக்கப்பட்டிருந்தது. சபைக்கு சொந்தமான டிரக்டர் ஒன்று மற்றும் கப்வண்டி ஒன்றும் 05 வருடங்களை விட மிகையான காலம் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது எனவும் இந்த சொத்துக்கள் தொடர்பாக மேற்கூறிய சுற்று நிருபத்தின் படி நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை எனவும் 2014 மார்ச் மாதத்தில் மேற் கொண்ட கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் சபையின் விஷேட கவனம் தேவைப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்